SECONDARY SCHOOL

END - OF - YEAR EXAMINATION - 2017

TAMIL LANGUAGE PAPER

SECONDARY 3 EXPRESS / 3NA

குறிப்புகள் :

1. ஒவ்வொரு வினாத் தொகுதியின் தொடக்கத்திலுள்ள குறிப்புகளைப் படித்துப் புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைத் தாளிலேயே எழுத வேண்டும்.

பெயர் : ______

வகுப்பு : ______

மதிப்பெண்கள் : /70

இவ்வினாத்தாளில் அடங்கியுள்ள வினாக்கள் பக்கம் 2 முதல் 9 வரை அச்சிடப் பட்டுள்ளன. கடைசி வினாவின் கீழ் 'முற்றும்' என்னும் சொல் காணப்படும்.

**SECONDARY 3 EXPRESS** **SECONDARY 3 SET 2 /15**

More papers at www.testpapersfree.com

SECONDARY SCHOOL

END - OF - YEAR EXAMINATION - 2017

TAMIL LANGUAGE PAPER

SECONDARY 3 EXPRESS / 3NA

தேதி:

70 மதிப்பெண்கள்
நேரம்: 1½மணி

"அ" பிரிவு

A1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.

Q1 எந்த ஒரு காரியத்திலும் ஈடுபடுவதற்கு முன்னால் அதைப் பற்றி ____________ சிந்தித்த பின்னரே அந்தக் காரியத்தில் ஈடுபட வேண்டும்.

Q2 தன்னைப் பற்றி ஆசிரியரிடம் ____________ சொன்ன வனிதாவின் நட்பை மீனா முறித்துக்கொண்டாள்.

Q3 புதிதாக எதையாவது கற்கும்போது ____________ அனைத்தையும் கற்றுக் கொண்டுவிடலாம் என்று எண்ணுவது தவறு.

Q4 இளங்கோ தன் நண்பனிடம் வாங்கிய கடனைத் திருப்பித் தராது அவனை ____________.

Q5 வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் ____________நின்றிருந்த காட்சியைக் கண்ட பலரின் மனம் உருகியது.

(1) கம்பி நீட்டினான். (2) கண்ணும் கருத்துமாக

(3) இல்லாததும் பொல்லாததும் (4) ஆரவமற

(5) கண்ணீரும் கம்பலையுமாக (6) தட்டிக் கொடுத்து

(7) ஓட்டமும் நடையுமாக (8) இழுக்கடித்தான்.

(9) ஏட்டிக்குப் போட்டியாக (10) எடுத்த எடுப்பிலேயே

SECONDARY 3
EXPRESS



More papers at www.testpapersfree.com

A2 வாக்கியங்களை முடித்தெழுதுதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்து எழுதவும். அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும். உமது விடைகளை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.

Q6 நம் சிங்கை நாட்டின் வளர்ச்சிக்கு மக்களின் அயரா உழைப்பே காரணமாகும்.

மக்கள் அயராது உழைத்திருக்காவிட்டால் ____________________.

Q7 இளமையில் பெற்றோர் கூறிய அறிவுரையைப் புறக்கணித்த முகுந்தன் பிற்காலத்தில் பெரும் துன்பத்திற்கு ஆளானான்.

முகுந்தனின் துன்பத்திற்கு ____________________.

Q8 ஆராய்ச்சியாளர்கள் எதையும் சரியான சான்று இல்லாமல் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஆராய்ச்சியாளர்கள் ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால் ____________________.

Q9 கணினி, இயந்திரமனிதக் கருவி போன்ற சாதனங்களின் உதவியால் தொழிற்சாலைகளில் உற்பத்தித் திறன் கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

கணினி, இயந்திரமனிதக் கருவி போன்ற சாதனங்களின் உதவி ____________________.

Q10 ஒருவரின் வெற்றிக்கு அடிப்படையாக அமைவது அவரின் விடாமுயற்சியே ஆகும்.

ஒருவரின் வெற்றி ____________________.



More papers at www.testpapersfree.com

A3 அமைப்புச் சொற்கள் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள், பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.

வாழ்க்கையில் முன்னேற விரும்புபவர்கள் பிறர் கூறும் கருத்துகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்பது உண்மைதான். ஆனால், அதற்கு ஓர் எல்லை உண்டு. அந்த எல்லையைச் சரியான முறையில் அடையாளம் கண்டுகொண்டவர்களால் மட்டுமே பிறரின் கருத்துகளால் (Q11)____________________ மகிழ்ச்சியாக இருக்க முடியும். அக்கருத்துகளுக்கு அளவுக்கு மீறி முக்கியத்துவம் கொடுக்க (Q12)____________________ குழப்பம்தான் மிஞ்சும்.

நமது தோற்றம், நாம் உடுத்திருக்கும் உடை, பயன்படுத்தும் பொருள்கள், தனித்திறன்கள் இவற்றைப் பிறர் பாராட்ட வேண்டும் என்ற (Q13)____________________ நமக்கு இருக்கும். ஆனால், அப்படி நடக்காத போது மனம் தளர்ந்து போவது சரியாகுமா? பிறர் கேலி செய்துவிட்டால் மனம் தளர்ந்து போகும் இளையர்கள் பலரை நாம் இன்று பார்க்கிறோம். ஆனால், இளையர்கள் இவ்வாறு கேலி செய்பவர்களை (Q14)____________________ தம் வாழ்க்கையைத் தொடர வேண்டும்.

நம்மீது அக்கறையுள்ளவர்கள் நம்மைப் பற்றிக் கருத்துத் தெரிவித்தால் அதை நாம் (Q15)____________________ வேண்டும். ஆனால், வேண்டுமென்றே குறை கூறுபவர்களின் கருத்துகளை நாம் ஒதுக்கிவைக்கத் கற்றுக்கொண்டால்தான் வாழ்க்கையில் வெற்றிபெற இயலும்.

| | |
|---|---|
| (1) கடைப்பிடித்தால் | (2) பொருட்படுத்தாமல் |
| (3) ஆரம்பித்தால் | (4) தள்ளிவிட்டு |
| (5) மதிக்க | (6) தவறினால் |
| (7) சோர்வடையாமல் | (8) ஈடுபாடு |
| (9) எதிர்பார்ப்பு | (10) பாதிக்கப்படாமல் |



More papers at www.testpapersfree.com

"ஆ" பிரிவு


B4 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதிகளைக் கருத்தூன்றிப் படித்து, அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு விடை எழுதவும். வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.

பகுதி 1

சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்



சுற்றுச்சூழலைக் கட்டிக்காப்பதிலும் வளங்களைப் பாதுகாப்பதிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தப் பசுமை சமூக மன்றம் ஒன்று சிங்கப்பூரில் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பசுமை சமூக மன்றத்திலும் 2,000 தொண்டூழியர்கள் இருப்பர். வீடமைப்பு வளர்ச்சிக் கழக மறுபயனீட்டு மையங்களில் சேவை புரியவிருக்கும் இந்தத் தொண்டூழியர்கள் எந்தெந்தப் பொருள்களை எவ்வாறு மறுபயனீடு செய்யலாம் என்பது குறித்து மக்களுக்கு விளக்குவர். இவர்கள் மேலும் புதிதாக அமைக்கப்படவிருக்கும் மறுபயனீட்டுத் தொட்டிகள் பற்றியும் மக்களுக்கு எடுத்துக்கூறுவர்.

நல்லதொரு சுற்றுச்சூழலில்தான் நாம் நலமுடன் வாழ முடியும். அதனால்தான், சுற்றுச்சூழலைத் தூய்மையாக வைத்துக்கொள்ளும் முயற்சியை ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும்; ஒவ்வொருவரின் சிறிய முயற்சியுமே சுற்றுச்சூழலில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

மேற்கண்ட விவரங்களைப் 'பெட்டிர்' பூங்காவில் நடைபெற்ற மறுபயனீடு பற்றிய அறிமுக நிகழ்ச்சியில் உரையாற்றிய வடமேற்கு வட்டார மேயர் டாக்டர் டியோ ஹோ பின் தெரிவித்தார்.



More papers at www.testpapersfree.com

வினாக்கள்

Q16 தொண்டூழியர்களின் பணி என்ன?

(1) சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது
(2) மறுபயனீடு குறித்த தகவல்களைக் கூறுவது
(3) பசுமை சமூக மன்றங்களின் பணிபற்றி எடுத்துரைப்பது
(4) மறுபயனீட்டுத் தொட்டிகள் அமைப்பது

Q17 பொதுமக்களுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள் யாது?

(1) சுற்றுச்சூழலைப் பேணி நலமுடன் வாழ வேண்டும்
(2) சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு நாம் மாற வேண்டும்
(3) சுற்றுச்சூழலில் தூய்மையாகப் பணியாற்ற வேண்டும்
(4) சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அக்கறைகாட்ட வேண்டும்

பகுதி 2



வாழ்க்கையில் வெற்றி தோல்வி ஏற்படுவது இயல்பே. ஆனால், பலர் முதல் தோல்வியிலேயே சோர்ந்து விடுகிறார்கள். இனி நமக்கு ஒளிமயமான வாழ்வே இல்லை என்று கற்பனை செய்துகொண்டு தேவையற்ற குழப்பங்களிலும் வேதனைகளிலும் வெந்து கருகி விடுகிறார்கள்.

எப்படிப்பட்ட துன்பங்கள், அதிர்ச்சிகள் ஏற்பட்டாலும் அவற்றிலிருந்து மீண்டு எழுவது மிக அவசியம். எப்போதும் தோல்வியே வரக்கூடாது என்று ஆசைப்படுவதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், நடைமுறை வாழ்க்கையில் எத்தனையோ காரணங்களால் தோல்விகள் ஏற்படக்கூடும். அப்படித் தோல்விகள் ஏற்படும்போது, அவற்றைத் துணிவுடன் எதிர்கொண்டு "வாழ்ந்து காட்டுவேன்" என்ற உறுதியான நெஞ்சத்துடன் செயல்படுபவர்களே வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள்.

பிறக்கும்போதே தோல்வியிலிருந்து மீளும் தன்மை சிலருக்கு உண்டு என்று சொல்லப்படுவது உண்மையல்ல. ஒருவர் மனத்துணிச்சல், பகுத்தறிவுகொண்டு



More papers at www.testpapersfree.com

உணர்ச்சிவசப்படாமல் எதையும் ஆராய்ந்து பார்க்கும் திறனை வளர்த்துக்கொண்டால், எந்தச் சிக்கலுக்கும் தீர்வுகாண முடியும்.

இன்று மக்கள் இயற்கைப் பேரிடர்களால் பெரிதும் அவதியுறுகிறார்கள். உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய சுனாமி எனப்படும் ஆழிப் பேரலை மீனவர் பலரின் நெருங்கிய உறவுகளையும் உடைமைகளையும் பறித்துவிட்டது. இருந்தபோதிலும் அவர்கள் அதிலிருந்து மீண்டு, பாடுபட்டு உழைத்து, வாழ்க்கையைத் தன்னம்பிக்கையோடு நடத்தி வருகிறார்கள். 'எந்தச் சோதனையிலிருந்தும் என்னால் மீள முடியும்' என்ற மனத்துணிவுடனும் 'இந்தப் பிரச்சினை அதிக நாள் நீடிக்காது; விரைவில் ஓடிவிடும்' என்ற எண்ணத்துடனும் செயல்பட்டால் வாழ்க்கைப் பயணங்கள் வெற்றி அடையும்.

<u>வினாக்கள்</u>

Q18 எது மக்களுக்குப் பெருந் துன்பத்தைக் கொடுக்கிறது?

(1) அவர்களுக்குத் தோன்றும் சோர்வு
(2) அவர்களுக்குத் தோன்றும் தேவையற்ற கற்பனை
(3) அவர்களுக்கு ஏற்படும் முதல் தோல்வி
(4) அவர்களுக்கு ஏற்படும் ஏமாற்றம்

Q19 கட்டுரையாசிரியர் எதைச் சரி என்று கூறுகிறார்?

(1) துன்பத்திலிருந்து மீள வேண்டும் என்று நினைப்பதை
(2) தைரியத்துடன் செயல்பட வேண்டும் என்று நினைப்பதை
(3) எப்போதுமே வெற்றிபெற வேண்டும் என்று நினைப்பதை
(4) நடைமுறை வாழ்க்கையை வாழ வேண்டும் என்று நினைப்பதை

Q20 எப்போது ஒருவரால் எந்தத் துன்பத்திலிருந்தும் வெளிவர முடியும்?

(1) வாழ்க்கையில் பாடுபடக் கற்றுக்கொண்டால்
(2) பிறக்கும்போது மீளும் தன்மையுடன் பிறந்திருந்தால்
(3) இயற்கைப் பேரிடர்களைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தால்
(4) கூர்ந்து ஆராயும் திறனை மேம்படுத்திக்கொண்டால்



More papers at www.testpapersfree.com

## "இ" பிரிவு

C5 சுயவிடைக் கருத்தறிதல் (30 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதவும்.

கேள்வி கேட்பது என்பது சாதாரணமான ஒன்றல்ல. உண்மையில், கேள்வி கேட்பது என்பது ஒரு கலை. கேள்வி கேட்பவர் புத்திசாலித்தனமான கேள்வியைக் கேட்டால்தான், பதில் சொல்பவரும், புத்திக்கூர்மையான, அறிவுபூர்வமான பதிலைச் சொல்ல முடியும்.



வகுப்பறையில் ஓர் ஆசிரியரின் முக்கியப் பணிகளுள் ஒன்று கேள்விகள் கேட்பது. அதைவிட முக்கியமானது மாணவர்களைக் கேள்விகள் கேட்க ஊக்குவிப்பது. ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களைப் புரிந்துகொண்டு மாணவர்கள் சுயமாகக் கேள்வி கேட்கத் தொடங்கினால், உண்மையான அறிவு வளரத் தொடங்கிவிடும். அதே சமயத்தில் மாணவர்கள் தங்களுக்கு ஏற்படும் ஐயங்களுக்குக் கேள்விகள் மூலம் தெளிவுபெற முயல வேண்டும். ஆசிரியர், மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பொறுமையாகவும் திறமையாகவும் பதில் சொன்னால், மாணவர்கள் அதிகம் கற்றுக்கொள்ள வாய்ப்பு உண்டாகிறது என்பது கல்வியாளர்கள் கருத்து.

இன்றைய இளையர்கள் பெரியவர்களிடம் கேள்வி கேட்கும்போது அந்தக் கேள்விக்குத் தமக்குப் பதில் தெரியவில்லை என்று சொல்வதற்குப் பெரியவர்கள் வெட்கப்படுவார்கள். அதனால், "அந்தக் காலத்தில், நாங்கள் இளையர்களாக இருந்தபோது பெரியவர்கள் சொன்னால் அப்படியே நம்பினோம். இப்படியா கேள்விகள் கேட்டோம்?" என்று கூறிச் சமாளிப்பார்கள்.

மரத்திலிருந்து பழம் ஏன் கீழே விழுகிறது என்று நியூட்டன் கேள்வி கேட்டதால்தான் புவியீர்ப்புச் சக்தி (law of gravity) என்ற உண்மை



More papers at www.testpapersfree.com

கண்டறியப்பட்டது. பறவைகள் மட்டும் பறக்கின்றனவே, மனிதனால் ஏன் பறக்க முடியவில்லை என்று ரைட் சகோதரர்கள் கேட்ட கேள்வியால்தான் இன்று நாம் வானில் பறக்கிறோம். இவ்வாறு அறிவியல் அறிஞர்கள் தங்களைத் தாங்களே நிறையக் கேள்விகள் கேட்டுக்கொண்டது பல கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்தது.

## சாக்ரடீஸ்



கேள்விகள் கேட்டு, மக்களைச் சிந்திக்க வைத்தவர்களுள் முக்கியமானவர் கிரேக்கத் தத்துவ ஞானியான சாக்ரடீஸ். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சாக்ரடீஸ் சிறுவனாக இருந்தபோதே கேள்விகள் கேட்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். இந்த வழக்கம் அவர் வளர வளர வளர்ந்தது. எதைப்பற்றியும் கேள்வி கேட்டு, அது பற்றிய உண்மையை அறிந்துகொண்டதே அவருடைய இந்த வளர்ச்சிக்குக் காரணமானது.

மற்றவர்கள் சாக்ரடீஸிடம் கேள்வி கேட்டால் அதற்கு நேரடியாகப் பதில் சொல்வதை அவர் தவிர்த்தார். ஏதாவது ஒரு பிரச்சினையை <u>மையமாகக்கொண்டு</u> மக்களிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டு, அவர்களைச் சிந்திக்க வைப்பார். பிறகு, அவர்களிடமிருந்தே பதிலைப் பெற்று, அந்தப் பிரச்சினையை எழுப்பியவர்களே அதற்கான காரணத்தைப் புரிந்துகொள்ளுமாறு செய்வார் சாக்ரடீஸ். ஒரு பிரச்சினையின் காரணத்தைத் தமது கேள்வியின் மூலம் பொதுமக்களை உணரச்செய்த சாக்ரடீஸ், அந்தப் பிரச்சினையைக் <u>களைவதற்கும்</u> கேள்விகளையே கேட்டார். இதுபோன்ற செயல்களால் மக்கள் தெளிவு பெற்றனர்; பிரச்சினையைப் புரிந்துகொண்டனர். அதற்கான காரணத்தையும் அறிந்தனர். அதைப் போக்குவதற்குச் செய்ய வேண்டியவற்றையும் அவர்கள் உணர்ந்தனர். சாக்ரடீஸின்



More papers at www.testpapersfree.com

இந்தக் கேள்வி கேட்கும் முறை மக்களை வெகுவாகக் கவர்ந்தது.

இவ்வாறு கேள்வி கேட்டுப் பலர் வாழ்வில் உயர்ந்துள்ளனர். அவர்களைப் பின்பற்றி நாமும் தேவையான இடங்களில் பொருத்தமான கேள்விகளைக் கேட்டு வாழ்வில் உயர்வடைவோமாக!

வினாக்கள்

Q21 ஒரு மாணவனின் அறிவு எப்போது விரிவடைகிறது? (4 மதிப்பெண்கள்)

Q22 அன்றைய இளையர்களுக்கும் இன்றைய இளையர்களுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்று கட்டுரை ஆசிரியர் குறிப்பிடுகிறார்? (5 மதிப்பெண்கள்)

Q23 அறிவியல் அறிஞர்கள் தங்களைத் தாங்களே நிறையக் கேள்விகள் கேட்டுக்கொண்டது பல கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்தது என்று எதன் மூலம் பகுதியில் வலியுறுத்திக் கூறப்படுகிறது? (6 மதிப்பெண்கள்)

Q24 கேள்வி கேட்டலில் சாக்ரடீஸ் கையாண்ட முறை என்ன? (6 மதிப்பெண்கள்)

Q25 சாக்ரடீஸின் கேள்வி கேட்கும் முறையால் மக்கள் அடைந்த பயன்கள் யாவை? (4 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட பகுதியில் இடம்பெற்றுள்ளன. அச்சொற்களின் பொருளை விடைத்தாளில் எழுதவும்

Q26 ஊக்குவிப்பது (1 மதிப்பெண்)

Q27 சுயமாக (1 மதிப்பெண்)

Q28 மையமாகக்கொண்டு (1 மதிப்பெண்)

Q29 களைவதற்கும் (1 மதிப்பெண்)

Q30 வெகுவாக (1 மதிப்பெண்)

முற்றும்



More papers at www.testpapersfree.com

# TESTPAPER 2

<u>Set 2- விடைகள்</u>

<u>எந்த ஒரு காரியத்திலும் ......</u>

Q1. 4 Q2. 3 Q3. 10 Q4. 8 Q5. 5

Q6. . . நம் சிங்கை நாடு வளர்ச்சி அடைந்திருக்காது.

Q7. . . காரணம், இளமையில் பெற்றோர் கூறிய அறிவுரையை அவன் புறக்கணித்ததே ஆகும்.

Q8. . . எதுவும் சரியான சான்றோடு இருக்க வேண்டும்.

Q9. . . இல்லாதிருந்தால் தொழிற்சாலைகளில் உற்பத்தித் திறன் கணிசமான உயர்ந்திருக்காது.

Q10. . . அவரின் விடாமுயற்சியின் அடிப்படையிலேயே அமைகிறது.

Q11. 10 Q12. 3 Q13. 8 Q14. 2 Q15. 5

Q16. 2 Q17. 4 Q18. 3 Q19. 3 Q20. 4

Q21. ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களைப் புரிந்து கொண்டு ஒரு மாணவர் சுயமாகக் கேள்வி கேட்கத் தொடங்கும் போது, அவரின் அறிவு விரிவடைகிறது.

Q22. இன்றைய இளையர்கள் பெரியவர்களிடம் கேள்வி கேட்கத் தயங்குவதில்லை. அன்றைய இளையர்கள் பெரியவர்கள் சொன்னால் அப்படியே நம்பியதோடு கேள்விகள் கேட்பதில்லை.

Q23. மரத்திலிருந்து பழம் ஏன் கீழே விழுகிறது என்று நியூட்டன் கேட்டதால்தான் புவியீர்ப்புச் சக்தி என்ற உண்மை கண்டறியப்பட்டது. பறவைகள் மட்டும் பறக்கின்றனவே, மனிதனால் ஏன் பறக்க முடியவில்லை. என்று ரைட் சகோதரர்கள் கேட்ட கேள்வியால்தான் இன்று நாம் வானில் பறக்கிறோம். இதன் மூலம் அறிவியல் அறிஞர்கள் தங்களைத் தாங்களே நிறையக் கேள்விகள் கேட்டுக் கொண்டது பல கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்தது என்று பகுதியில் வலியுறுத்திக் கூறப்பட்டது.

Q24. மற்றவர்கள் தன்னிடம் கேள்வி கேட்டால் அதற்கு நேரடியாகப் பதில் சொல்வதை சாக்ரடீஸ் தவிர்த்தார். ஏதாவது ஒரு பிரச்சினையை மையமாகக் கொண்டு அவர் மக்களிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டு அவர்களைச் சிந்திக்க வைப்பதோடு அவர்களிடமிருந்தே பதிலைப் பெற்று அந்தப் பிரச்சினையை எழுப்பியவர்களே அதற்கான காரணத்தைப் புரிந்து கொள்ளுமாறும் செய்வார் சாக்ரடீஸ். ஒரு பிரச்சினையின் காரணத்தைத் தமது கேள்வியின் மூலம் பொதுமக்களை உணரச் செய்த சாக்ரடீஸ் அந்தப் பிரச்சினையைக் களைவதற்கும் கேள்விகளையே கேட்டார். இதுவே கேள்வி கேட்டலில் சாக்ரடீஸ் கையாண்ட முறை ஆகும்.

Q25. மக்கள் தெளிவு பெற்றதோடு பிரச்சினையைப் புரிந்து கொண்டு அவற்றுக்கான காரணத்தையும் அறிந்தனர். அதைப் போக்குவதற்குச் செய்ய வேண்டியவற்றையும் அவர்கள் உணர்ந்தனர். இவையே சாக்ரடீஸின் கேள்வி கேட்கும் முறையால் மக்கள் அடைந்த பயன்கள் ஆகும்.

Q26. ஊற்சாகமூட்டுவது

Q27. சொந்தமாக

Q28. நடுநிலையில் கொண்டு

Q29. நீக்குவதற்கும், அழிப்பதற்கும்

Q30. மிகுதியாக, அதிகமாக

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com